# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான வாக்குமூலம் ஆதாரங்களைச் சமர்ப்பிக்க மைத்திரிக்கு அழைப்பு!



## ஜனாதிபதி ஆணைக்குழு கடிதமூலம் விடுத்தது

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் வழங்கிய வாக்குமூலம் தொடர்பான ஆதரங்களை நாளையதினம் சமர்ப்பிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு ஜனாதிபதி ஆணைக்குழு கடிதமூலம் அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் சனல் 4 வெளியிட்ட ஆதாரங்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவே இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளது.

உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் ஐ.எம்.இமாம் தலைமையிலான விசாரணை ஆணைக்குழு தாக்குதல் தொடர்பான தகவல்களை தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றது.

இந்நிலையில் விசாரணை ஆணைக்குழுவின் தலைமைச் செயலாளர் திருமதி எஸ்.மனோகரன் இது தொடர்பான எழுத்துமூல அழைப்பை கடந்த 28ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அனுப்பிவைத்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி 2➤

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 19 திங்கட்கிழமை 01.04.2024 கதிர் 216

## "இம்முறை புத்தாண்டை ஆடையின்றியே கொண்டாடும் நிலையே ஏற்பட்டுள்ளது"

### நுகர்வோர் உரிமைகள் இயக்கத்தின் தலைவர் ரஞ்சித்



"இந்த புத்தாண்டு காலத்தில் ஒரு ஷேர்ட் மற்றும் சாரம் வாங்குவதற்கு சுமார் 4000 முதல் 5000 ரூபாய் 2➤

## 'நாமல் ராஜபக்ச தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டாலும் தேர்தலில் மொட்டு கட்சியின் இறுதி ஊர்வலம் தான் நடைபெறும்'

### மொட்டு எப்போதோ கருகிவிட்டது என்கிறார் முஜிபுர் ரஹ்மான்

'ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளராக நாமல் ராஜபக்ச நியமிக்கப்பட்டாலும் மொட்டு கட்சிக்கு இப்போது எதிர்காலம் இல்லை, நாமல் மட்டுமல்ல மஹிந்தவுக்கு கூட மொட்டு கட்சியை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது' என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் மொட்டு ஏற்கனவே கருகிவிட்டது, அதில் இப்போது இருப்பது துர்நாற்றத்தை மொய்க்கும் ஈக்கள் மட்டும்தான். மொட்டு கருகிப்போய் பல நாட்களாகிவிட்டது. அதன் ஆயுள் காலம் முடிந்து 2➤



## நாமல் ராஜபக்ஷ தொழிநுட்பம் தெரிந்தவர், இளையோரின் உணர்வுகளை புரிந்தவர் என்பதால் கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்!

### மின்சக்தி, எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி. சானக்க நம்பிக்கை



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் புதிய தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவிற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட பிரிந்து சென்ற இதர கட்சியினரையும் ஒன்று சேர்த்து ஒரு குடையின் கீழ் கொண்டுவரும் திறமை உள்ளது என மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி. சானக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "நமது நாட்டிலுள்ள பிரச்சினைகளாகட்டும், உலகிலுள்ள பிரச்சினைகளாகட்டும் அவற்றை தொழிநுட்பத்தின் உதவியோடுதான் தீர்க்க முடியும். நமது நாட்டின் தொழிநுட்பமானது உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் எப்போதும் இருபது வருடங்கள் பின்னோக்கியே இருந்துள்ளது. ஆனால், பொதுஜன பெரமுனவின் புதிய தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எப்போதும் தொழில்நுட்பத்துடன் செயற்படுபவர். நாட்டின் பிரச்சினைகள், கிராமத்தின் பிரச்சினைகள், மக்கள் பிரச்சனைகளை தீர்க்கும் தொழில்நுட்பம் அவருக்கு தெரியும். 2➤

## லிட்ரோ சமையல் எரிவாயுக்களின் விலைகள் அதிரடியாகக் குறைப்பு

இன்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டுள்ளது என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

கொழும்பில் இன்று முற்பகல் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அதன் தலைவர் முதித்த பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 135 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி அதன் புதிய விலை 4,115 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், 5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன் விலை 55 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 1,652 ரூபாவாகும்.

2.3 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 23 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 772 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ)

## வவுனியா சிறைக் கைதி ஒருவர் வைத்தியசாலையில் உயிரிழப்பு

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் நேற்று மாலை மரணமடைந்துள்ளார்.

குற்றச் செயல் ஒன்று தொடர்பில் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டதையடுத்து சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். வைத்தியசாலையில் மேற்படி கைதிக்கு சிகிச்சை வழங்கப்பட்ட போதும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

மாரடைப்பு காரணமாகவே மரணம் இடம்பெற்றுள்ளது என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். ஜா - எல பகுதியைச் சேர்ந்த 34 வயது இளைஞரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலசாஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## காந்தள் பூவையே அலங்கரித்தோம் கார்த்திகை மலர் எனத் தெரியாது!

### மாணவர்கள் பொலிசாருக்குப் பதில்

யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரியில் இடம்பெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டி இல்ல அலங்காரத்தில் காந்தள் பூவையே அலங்கரித்தோம் எனவும், கார்த்திகைப் பூ என்று தமக்குத் தெரியாது எனவும் பொலிஸாருக்கு மாணவர்கள் பதிலளித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம்பெற்ற விளையாட்டு போட்டியில் கார்த்திகைப் பூ மற்றும் கவச வாகனத்தை ஒத்த அலங்காரங்கள் நேற்று முன்தினம் காட்சிப்படுத்தப்பட்டன.

குறித்த விடயம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் சில மாணவர்களையும் ஆசிரியர்களையும் நேற்று விசாரணைக்காக பொலிஸ் நிலையம் வருமாறு அழைத்திருந்தனர்.

பொலிஸாரின் விசாரணையில், 2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# தமிழரசுக் கட்சியின் நிருவாகத் தெரிவு வழக்கின் அடுத்த தவணை 5 ஆம் திகதி

தமிழரசுக் கட்சியின் நிருவாகத் தெரிவு தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வரும் நிலையில், வழக்கின் அடுத்த தவணை எதிர்வரும் 5ஆம் திகதி இடம்பெறவுள்ளது என தமிழரசு கட்சியின் மாவட்ட கிளை தலைவர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலையில் இன்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (04)

# ரஷ்ய மற்றும் உக்ரைன் படைகளுடன் இணைய வேண்டாம் என அறிவுறுத்து!



சட்டவிரோதமான முறையில் ரஷ்ய மற்றும் உக்ரைன் படைகளுடன் இணைய வேண்டாம்!, என அனைத்து ஆயுதப்படை உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்ய மற்றும் உக்ரேன் படைகளுடன் இந்நாட்டின் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் இணையவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ள நிலையில் பாதுகாப்பு அமைச்சுக்கு இது தொடர்பில் எவ்வித தொடர்பும் இல்லை, எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்ய மற்றும் உக்ரேன் இராணுவத்திற்கு சேவையாற்றுவதற்கு இலங்கை இராணுவத்தினரை அனுப்புவதற்கு இலங்கை இராணுவத்திற்கும் ரஷ்ய இராணுவத்திற்கும் இடையில் எவ்வித உடன்பாடும் ஏற்படாத பின்னணியில் இவ்வாறான சம்பவங்கள் நாட்டின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தும், எனவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (04)

# லாஃப்ஸ் எரிவாயு விலை குறைகிறது!




இன்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிவாயு விலையை குறைக்க லாஃப்ஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோகிராம் லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டரின் விலை 625 ரூபாவினால் குறைக்கப்படும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 12.5 கிலோ கிராம் லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 4,111 ரூபாவாகும்.

அத்துடன், 5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலையை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 1,652 ரூபாவாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (04)

## உயிர்த்த ஞாயிறு...

*மைத்ரிபால சிறிசேன, ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் ஆஜராகி, உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பின்னணி இரகசியங்களை முன்வைக்குமாறு மாளிகாகந்த நீதவான் உத்தரவிட்டுள்ளார். (04)*

## காந்தள் பூவையே...

நீங்கள் இல்ல அலங்காரம் செய்தது கார்தத்திகைப் பூவைத் தானே? இதற்கான ஆலோசனைகளை ஆசிரியர்கள்தானே வழங்கினார்கள்? என கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதன் போது பதில் வழங்கிய மாணவர்கள், நீங்கள் கூறுவதைப் போல குறித்த பூ கார்த்திகைப் பூ என நாங்கள் அறிந்திருக்கவில்லை. காந்தள் மலர் என அறிந்துள்ளோம். எமது பாடப்புத்தகத்தில் அவ்வாறே உள்ளது. அது மட்டுமல்லாது வருடத்தில் ஒரு முறை பூக்கும் அரிய மலரான அதனைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே காட்சிப்படுத்தினோம், என தெரிவித்துள்ளனர்.

இதன்போது குறுக்கிட்ட பொலிஸார், உங்கள் இல்ல அலங்காரத்திற்கான ஆலோசனையை ஆசிரியர்கள் தானே வழங்கினார்கள்? எனக் கேள்வியெழுப்பினர்.

இதன்போது பதிலளித்த மாணவர்கள், ஆசிரியர்களும் காந்தள் பூ இல்ல அலங்காரத்திற்கும் தொடர்பு இல்லை. நாங்கள் இவ்வாறு அமைக்கப் போகிறோம் என அவர்களுக்கு தெரியப்படுத்தவும் இல்லை - என்றனர்.

இதன் போது பல்வேறு வழிகளில் குறித்த இல்ல அலங்காரத்திற்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் முடிச்சுப் போட பொலிஸார் முனைந்த நிலையிலும் மாணவர்கள் குறித்த பதிலையே மீண்டும் மீண்டும் தெரிவித்துள்ளனர்

பாடசாலை அதிபரும் பொலிஸ் நிலையத்திற்கு வாக்குமூலம் வழங்க அழைக்கப்பட்ட நிலையில் தனது வாக்குமூலத்தில், ஏற்கனவே இல்ல மெய்வல்லுனர் போட்டிக்கான பாடசாலை ஆசிரியர்கள் கூட்டத்தில் தெளிவாக கூறினேன் என்றும், ஏற்கனவே கிளிநொச்சியில் இடம்பெற்ற இல்ல அலங்காரம் தொடர்பில் எழுந்த சர்ச்சை பற்றியும் கூட்டத்தில் தெரிவித்தேன் எனவும், இவ்வாறான அலங்காரம் தொடர்பில் தானும் அறிந்திருக்கவில்லை எனவும் தெரிவித்தார் என அறிய முடிகிறது. (01)

## இம்முறை புத்தாண்டை...

வரை செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது மிகவும் அநீதியானதாகும். இன்று மக்கள் ஆடைகள் இல்லாமல் தான் சுப நேரத்தில் புத்தாண்டை கொண்டாட வேண்டியு ஏற்பட்டுள்ளது" என நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே நேற்று (31) தெரிவித்தார்.

ஏப்ரல் மாதம் என்பது வியாபாரிகள் நுகர்வோரை சுரண்டிப் பிழைக்கும் மாதமாக அமைந்துள்ளது எனவும் குறிப்பிட்ட அவர், "அத்தியாவசிய பொருட்களுக்கு அரசாங்கம் வரிச்சலுகைகளை வழங்கியிருப்பது வர்த்தகர்களுக்காக அல்ல அது நுகர்வோருக்காக வழங்கப்பட்டதாகும். இன்று நுகர்வோர் பாண் உண்பது என்பதை விட பாண் குறித்து நினைத்துப் பார்க்கவே கஷ்டப்படும் நிலையில் வர்த்தகர்கள் இந்த புத்தாண்டு காலத்தில் மக்களை சுரண்டிப் பிழைத்து வருகின்றனர்" எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெசி-03)

## நாமல் ராஜபக்ஷ....

மேலும், அவர் இளையோரின் உணர்வுகளை நன்றாக புரிந்துக்கொண்டவர். அவர் எப்போதும் இளைஞர்களோடேயே இருக்கின்றார். எனவே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சுற்றி இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் திறன் அவருக்கு உள்ளது என்ற நம்பிக்கையின் காரணமாகவே எமது கட்சி அவரை தேசிய அமைப்பாளராக நியமித்தது. அந்த பொறுப்புகளை எதிர்காலத்தில் அவர் சிறப்பாக நிறைவேற்றுவதை அனைவரும் காண்பார்கள்" என குறிப்பிட்டுள்ளார். (ரெசி-01)

## நாமல் ராஜபக்ச தேசிய...

விட்டது. அடுத்த தேர்தலில் மொட்டுவின் இறுதி ஊர்வலம் தான் நடைபெறும். அதற்கான சவப்பெட்டியை இப்போதே செய்து முடிப்பது நல்லது. கூடிய சீக்கிரம் நாமல் தனது ரணில் மாமாவுக்கு தேர்தலை நடத்துமாறு கூறிவிட்டு ஒதுங்குவதே நல்லது. ராஜபக்சக்களை காணும் ஒவ்வொரு தடவையும் நாட்டு மக்களின் கோபம் அதிகரிக்கின்றது. ஆகையினால் அவர்கள் செய்ய வேண்டியது, மக்கள் தாம் விரும்புகின்ற ஓர் ஆட்சியை ஏற்படுத்த வழிவிட்டு, ராஜபக்ச குடும்பத்தினர் ஒதுங்கிச் செல்வதே ஆகும். மக்கள் இப்போது மொட்டு கட்சியை ஒரு சதத்திற்கும் கூட மதிப்பதில்லை" என்றார். (ரெசி-02)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# தந்தை செல்வாவின் 126 ஆவது ஜனனதின விழா யாழ்ப்பாணத்தில்



தந்தை செல்வாவின் 126 ஆவது ஜனனதின விழாவும், விருது வழங்கும் நிகழ்வும் (31) நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

வழக்கம்பரை அம்மன் ஆலய முன்றலில் இருந்து விருந்தினர்கள் மற்றும் விருது பெறுபவர்கள் பாரம்பரிய முறைப்படி மேளதாளங்களுடன் அழைத்து வரப்பட்ட பின்னர் யாழ்.வலிகாமம் மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் வடமாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது ஊடகத் துறை சார்பில் தீம்புனல் பத்திரிகையின் ஆரியர் ஏ.ரவிவர்மா, ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் ஏ.தேவராஜன், சக்தி தொலைக்காட்சியின் ஊடகவியலாளர் வி.கஜீபன், யாழ். தினக்குரல் பத்திரிகையின் உதவி ஆசிரியர் க.ஹம்சனன், டான் ரி.வி தொலைக்காட்சியின் செய்தி ஆசிரியர் இ.நிர்மல் உள்ளிட்டோருக்கும், வைத்தியத் துறை மற்றும் சமுகசேவை உள்ளிட்ட பல துறைகளில் சாதித்த 20 பேருக்கும் "தந்தை செல்வா விருது" வழங்கி கௌரவமளிக்கப்பட்டது.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட 200 பயனாளிகளுக்கு கண்ணாடி வில்லைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# அட்டாளைச்சேனை சிறுவர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணம் வழங்கி வைப்பு

(எம்.எம்.றம்ஸீன்)

சிறுவர் கழகங்களை மேம்படுத்தும் நோக்கில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தினால் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.எம். கஸ்பியா வீவி, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எஸ்.எச். சியாத், ஏ.எல்.எம்.றணீஸ் ஆகியோரின் பங்குபற்றலுடன் பாலமுனை மின்ஹாஜ் தேசிய பாடசாலைக்கு கரம் போட் வழங்கி வைக்கப்பட்டது.



இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர் மற்றும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.




# சிட்னியில் சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலை திறப்பு விழா

## பன்னாட்டு அறிஞர்கள் பங்கேற்பு




(விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா)

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலை அவுஸ்திரேலிய மண்ணில் சிட்னி மாநகரில் கடந்த வெள்ளிக்கிழமை (29) இரவு திறந்து வைக்கப்பட்டது.

உலகில் முதல் தடவையாக இலங்கைக்கு வெளியே நிறுவப்படும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தருக்கான சிலை திறப்பு விழாவில் பன்னாட்டு அறிஞர்கள் பலரும் பங்கேற்றனர்.

சிட்னி துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் சிட்னி உதயசூரியன் மாணவர் உதவி மையத்தின் ஸ்தாபகரும், அவுஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியத்தின் கௌரவ போஷகரும், சமூக செயற்பாட்டாளருமான திரு. நாகமணி குணரெட்ணத்தினுடைய முழு முயற்சியின் பேரில் சுவாமி விபுலானந்த அடிகளார் திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது.

இதனை சுபநேரத்தில் சிலைநிறுவுனர் திரு திருமதி குணரெத்தினம் மனோன்மணி தம்பதியினர் மங்கலபேரிகைகள் முழங்க, திரைநீக்கம் செய்து மாலை சூட்டி நெற்றித்திலகமிட்டு திறந்து வைத்தனர்.

திரைநீக்க நிகழ்வு, பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்திருந்த பேராசிரியர்கள், தமிழ் அறிஞர்கள், கல்வியியலாளர் பெருமக்களின் பங்கேற்போடும் அவை நிறைந்த மக்கள் கூட்டத்தோடும் சிட்னி மாநகரில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக அண்ணாமலை பல்கலைக்கழக -கனடா வளாகத்தின் தலைவர் காரைதீவைச்சேர்ந்த பேராசிரியர்.பாலசுந்தரம் இளையதம்பி, மலேசியா தமிழ் பல்கலைக்கழக பேராசிரியர் மன்னர் மன்னன், இந்திய முனைவர் மு. இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்வில் "சிட்னியில் அடிகளார் படிவமலர்" என்ற சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

முதற்பிரதியை சிலைநிறுவுனரும் நூலாசிரியருமான நாகமணி குணரெட்ணம், பேராசிரியர் பாலசுந்தரம் அவர்களுக்கு வழங்கி வைத்தார்.

அழைக்கப்பட்ட பேராளர்களின் பேருரைகள், சிறப்புரைகள் மற்றும் தொகுப்புரைகளோடு,

வாழ்சாதனையாளர் விருது 23 பேருக்கும் சிறப்பு விருது 14 பேருக்கும் வழங்கப்பட்டன.

# பாலமுனை பிரைட் யூத் அமைப்பினால் உலருணவுப் பொருட்கள் வழங்கிவைப்பு



(எம்.ஏ.ஏ.அக்தார்)

பாலமுனை பிரைட் யூத் அமைப்பினால் உலர் உணவுப் பொதிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் உலர் உணவுப் பொதிகள் பாலமுனை அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரைட் யூத் அமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# நாட்டில் எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு இதற்கென புதிய 'செயலி' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது!



2023 ஆம் ஆண்டு மாத்திரம் நாட்டில் புதிதாக 695 எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்கள்

## விசேட மருத்துவ நிபுணர் ஜானகி விதானபத்திரன தெரிவிப்பு

இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய பாலியல் வினை நோய்கள் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஜானகி விதானபத்திரன தெரிவித்துள்ளார்.

இவர்களில் 20 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் உள்ளதாகவும், அநேகர் கடும் பாதிப்பிற்கு உள்ளாகியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எச்.ஐ.வி எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டமானது பாலுறவு நோய்களின் அபாயம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில் Know 4 Sure என்ற புதியதொரு மொபைல் ஃபோன் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "பாடசாலை பாடத்திட்டத்தில் வயதுக்கு ஏற்ப பாலியல் பாடம் சேர்க்கப்பட வேண்டும். அவ்வாறு செய்தால், அவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படும். இப்போது ஒருவருக்கு எச்.ஐ.வி மற்றும் பால்வினை நோய்கள் ஏதும் ஏற்பட்டுள்ளதா என்பதை அறிவதற்கு வசதியாகவே புதிய செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

எச்.ஐ.வி பாதிப்பிற்கு உள்ளாகியுள்ள ஒருவர் சிகிச்சைக்கு வரவில்லை என்றால், அதுவொரு பாரிய பிரச்சினையாக அமையும். எனவே, Know 4 Sure எனும் இந்த செயலியை பயன்படுத்தி, நாடு முழுவதும் உள்ள பால்வினை நோய்கள் சம்பந்தமான எந்தவொரு கிளினிக்கிற்கும் செல்வதற்கான திகதியை முன்பதிவு செய்யலாம்.

மேலும், வீட்டிலேயே பரீட்சித்துப் பார்க்க விரும்புகின்றவர்கள், குறித்த செயலி மூலம் சுய-பரிசோதனை 'கிட்' ஒன்றை பெற்றுக் கொள்ளலாம். எந்த சந்தர்ப்பத்திலும் ஒருவரை எச்.ஐ.வி. நிலைமையிலிருந்து காப்பதே நமது குறிக்கோள்" எனவும் குறிப்பிட்டுள்ளார். (ரெசி-04)

# நீதி அமைச்சரை கட்சித் தலைமையத்திற்கு வரவழைத்த நோக்கம் குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால நினைத்துப் பார்க்க வேண்டும்!

## சுதந்திரக் கட்சியின் பதவியிலிருந்து நீக்கப்பட்ட துமிந்த சுட்டிக்காட்டல்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதவிகளிலிருந்து தம்மை நீக்கியமைக்கு எதிராகவே இன்று (01) நீதிமன்றத்திற்கு செல்ல தீர்மானித்ததாக சிரேஷ்ட பிரதி தலைவர் மஹிந்த அமரவீர, பொருளாளர் லசந்த அழகியவன்ன மற்றும் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

தம்மை பதவியிலிருந்து நீக்கியதை விட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை தலைவரிடமிருந்து காப்பாற்ற வேண்டிய தேவை இருப்பதால் தான் முக்கியமாக நீதிமன்றத்திற்கு செல்ல தீர்மானித்ததாகவும் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் இணைந்துள்ளதாக குற்றம் சாட்டியே தம்மை பதவியிலிருந்து நீக்கியதாக குற்றம் சுமத்தப்பட்ட போதிலும், அரசாங்கத்தின் அமைச்சரான விஜயதாச ராஜபக்ஷ சிறப்புரையொன்றை ஆற்றுவதற்காக எனக் கூறி எதற்காக சுதந்திரக் கட்சியின் தலைமையகத்திற்கு வரவழைக்கப்பட்டார் என்பதன் நோக்கம் குறித்து தலைவர் நினைத்துப் பார்க்க வேண்டும் எனவும் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

ஒன்லைன் சட்டம் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காகவே கட்சித் தலைமையகத்திற்கு நீதி அமைச்சர் அழைக்கப்பட்டதாக கூறப்பட்ட போதிலும் அவ்வாறான விளக்கமளிப்புகள் எவையும் அங்கு நடைபெறவில்லை எனவும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகவிருந்த நிலையிலேயே நீதியமைச்சரை அவ்வாறு தலைமையகத்திற்கு அழைத்துள்ளார் என்பதன் நோக்கத்தை நீதி அமைச்சர் புரிந்து கொண்டு அவ்வாறான அழைப்பு கிடைத்த போது அதனை மீள்பரிசீலனை செய்திருக்க வேண்டும் எனவும் திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ரெசி-05)

# மோசடியாளர்களிடம் கவனமாக இருக்குமாறு பொது மக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தல்




தமிழ் - சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது, மோசடி வியாபாரிகள் மற்றும் திருடர்களிடம் கவனமாக இருக்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பிற்காக பொலிஸார் மட்டுமன்றி புலனாய்வுத் துறையினரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், இந்நாட்களில் திருடர்கள், முடிச்சுமாறிகள் பெருகியிருப்பதாகவும், அவ்வாறே போலி நாணயத்தாள்களை புழக்கத்தில் விடுகின்ற மோசடியாளர்கள் செயற்படுவதாகவும் எனவே, இவர்களிடம் பொதுமக்கள் பெரிதும் கவனமாக இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த காலகட்டங்களில், காலாவதியான உணவுகளை விற்பது உள்ளிட்ட தவறான செயல்களில் ஈடுபடும் மோசடி வியாபாரிகளிடமும் கவனமாக இருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (ரெசி-06)

# கல்முனையில் 8ஆவது நாளாக தொடரும் மக்கள் போராட்டம்



( வி.ரி.சகாதேவராஜா)

தமக்கு இழைக்கப்படும் அநீதிக்கு நீதி கோரி கல்முனையில் இன்று திங்கட்கிழமை எட்டாவது நாளாக பொதுமக்கள் போராட்டம் தொடர்கிறது.

பெருமளவில் பொதுமக்கள் கொழுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது அடையாள அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# புத்தாண்டில் முட்டையின் விலை ரூ.35 ஆகுமாம்!



புத்தாண்டின் போது உள்ளூர் முட்டை ஒன்றின் விலை 35 ரூபாயாக குறைவடையும் என விவசாய பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது உள்ளூர் சந்தையில் ஒரு முட்டை 42-48 ரூபாய் வரை விற்கப்படுவதாகவும், அத்துடன் எந்தவொரு காரணத்தை முன்னிட்டும் கோழி இறைச்சி மற்றும் முட்டை ஆகியனவற்றிற்கு தட்டுப்பாடு ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ரெசி-07)

# ரமழான் விடுமுறைக் கால கற்கை நெறி சான்றிதழ்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு



(அஸ்ஹர் ஆதம்)

ரமழான் விடுமுறைக் கால ஆர்விசி கற்கை நெறியைப் பூர்த்தி செய்த ஒலுவில் பிரதேச மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் அல் ஹம்றா மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த ஆராதனை மண்டபத்தில் ஹிக்மா சிறுவர் கழகத்தின் தலைவரும், ஜாமிஆ நளீமிய்யா கலாபீட மாணவருமான ஏ.ஜே. இம்சாமுல் அஹமட் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.. முஷாரப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

இங்கு கௌரவ அதிதிகளாக அல் ஹம்றா மகா வித்தியாலய அதிபர் அஷ்ஷெய்க் யு.கே. அப்துர் ரஹீம், நாடாளுமன்ற உறுப்பினரின் ஒலுவில் பிரதேச இணைப்பாளர் எம்.ஜே.எம். அஸ்ஹர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஹுசைனுதீன், நாடாளுமன்ற உறுப்பினரின் அட்டாளைச்சேனை இணைப்பாளர் எஸ்.எம்.அறூஸ், அதிபர் ஏ.எல். அப்துல் ஜப்பார், பிரதி அதிபர் ஐ. ஐ/மான், மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் றாசி பரீட் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# பட்டிருப்பு வலய பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(நூருல் ஹுதா உமர்)

இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் பட்டிருப்பு கல்வி வலயத்தில் உள்ள வக்கியெல்லை மட் .பட்.விளாந்தோட்டம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் வறிய குடும்பங்களை சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ச.திருநாவுக்கரசு தலைமையில் பாடசாலையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கல்விக்கு வறுமை தடையாக இருக்க கூடாது என்று "ஏழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்" எனும் தொனிப்பொருளில் இணைந்த கரங்கள் அமைப்பானது மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை கஷ்ட பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வருவதன் தொடர்ச்சியாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிறிதரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் பட்டிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளர் அருள்ராசா, பாடசாலை ஆசிரியர்களான பே.கணேசலிங்கம், செல்வி. சீ.விஜிதா, திருமதி. ந.கௌசல்யா இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான, சி.காந்தன், சி.துலக்சன், ஏ.எம். ரிஸ்வான் உட்பட பலரும் கலந்து கொண்டு மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.




# சம்மாந்துறை ஊடக மையத்தின் முதலாவது இப்தார் நிகழ்வு



(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறையில் சமூக ஊடக ஆர்வலர்கள் ஒன்றிணைந்த சம்மாந்துறை ஊடக மையத்தின் இப்தார் நிகழ்வு அண்மையில் ஊடக மையத்தின் தலைவர் ஏ பி இம்ரான் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஏ பி இம்ரான்,

சம்மாந்துறையில் காணப்படும் அனைத்து ஊடகவியலாளர்களையும் எதிர்காலத்தில் எமது அமைப்பில் இணைத்து இலங்கையின் சிறந்த ஓர் தடுநிலையான ஊடக மையமாக சம்மாந்துறை ஊடக மையத்தை மாற்றி அமைப்பதாக தெரிவித்ததோடு, எதிர்வரும் காலங்களின் சமூக ஊடக ஆர்வலர்களும் இணைந்து இவ்வமைப்பில் பயணிக்க உள்ளதாகவும் இவ்வமைப்பில் உள்ள அனைத்து ஊடகவியலாளர்களும் ஊடக ஒழுக்க நெறியை பின்பற்றி செயற்படுமாறும் அறிவுறுத்தல் வழங்கினார்.

இந்நிகழ்வில் உபசெயலாளர் ஐ.எல்.எம்நாசிம், பொருளாளர் ஜப்ரான் மற்றும் ஊடக மையத்தின் அமைப்பாளர் ஷாதிர் ஏ ஜப்பார் மற்றும் அமைப்பின் அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# வாசல் கவிதை சஞ்சிகை திருமலையில் வெளியீடு



(ஹஸ்பர் ஏ.எச்)

வாசல் வாசகர் வட்டத்தின் வெளியீடான வாசல் கவிதை சஞ்சிகை வெளியீடு கடந்த சனிக்கிழமை திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு, வாசல் வாசகர் வட்டத்தின் தலைவர் ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதனின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு, பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் பொன். சற்சிவானந்தம் கலந்து கொண்டிருந்ததுடன், சிறப்பு விருந்தினர்களாக திருகோணமலை மாவட்டத்தின் மூத்த எழுத்தாளர்களான திருமலை சுந்தா, கவிஞர் ஷெல்லிதாசன், கவிமணி அம்.கௌரிதாசன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில், தொடக்கவுரை மற்றும் நிகழ்ச்சி தொகுப்பினை கவிஞர் க.யோகானந்தம் வழங்கியிருந்தார்.

பிரதம ஆசிரியர் உரையினை வாசல் கவிதை சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ஊடகவியலாளர் ச.திருச்செந்தூரன் ஆற்றியிருந்ததுடன், ஈழத்து கவிதை சிற்றிதழ்களின் வரிசையில் வாசல் சஞ்சிகை என்ற தலைப்பில் கவிஞர் தி.பவித்ரன் விசேட உரையாற்றினார்.

இந்நிகழ்வில், திருகோணமலை மாவட்டத்தின் மூத்த எழுத்தாளர்களான திருமலை சுந்தா, கவிஞர் ஷெல்லிதாசன், கவிமணி அம்.கௌரிதாசன் ஆகியோர் 'கலைக்கேசரி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக வி.பி.எஸ்.டி.பத்திரண அமைச்சினால் நியமனம்




வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக வி.பி.எஸ்.டி.பத்திரண சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி செயற்பட்டுவரும் நிலையில் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பி.கே.விக்கிரமசிங்கவும் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக சுபாஸ்கரனும் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக வினோதனும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக உமாசங்கரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளராக ஜி.சுகுணனும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளராக எம்.எச்.எம். அசாத்தும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளராகவும் பி.எஸ்.என்.விமலரட்ணவும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளராக வீரக்கோனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக முன்னர் கடைமையாற்றி இடமாற்றப்பட்ட திலீப் லியனகே அனுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நியமனம் வழங்கப்பட்டவர்கள் விரைவில் கடமை களை பொறுப்பேற்பர் என தெரிவிக்கப்படுகிறது. (O1)

# இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவராக என்.எம்.சியாம் தெரிவு

(எம்.எம்.றம்ஸீன்)

சாய்ந்தமருது பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் இந்த வருடத்திற்கான நிர்வாகத் தெரிவானது இளைஞர் சேவை அதிகாரி எம். எம். சமீஹூல் இலாஹியின் தலைமையில் சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் கங்கா சாகரிக்க, கிழக்கு மாகாணக் காரியாலத்தின் உதவிப் பணிப்பாளர் யூ.எல்.ஏ.மஜீட், தேசிய இளைஞர் கழக சம்மேளன பிரதிநிதி அஸ்லம் சிப்னாஸ் மற்றும் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி முபாரக் அலி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் சாய்ந்தமருது பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட 20 க்கும் மேற்பட்ட இளைஞர் கழகங்களில் நிர்வாக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது 2024 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக தெரிவு நடைபெற்றது.



தலைவராக USF Srilanka இளைஞர் பேரவையின் பொதுச் செயலாளர் என்.எம். சியாம், உப தலைவராக கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவன் ஏ. ஆர்.எம். ஜப்ரான், பொருளாளராக எம்.எஸ்.தானீஸ், உப செயலாளராக ஏ. எம். ஆதீல், அமைப்பாளராக ஏ.ஜீ.எம். அப்ரித், உப அமைப்பாளராக எம்.பர்ஹத் பராஸ் மற்றும் விளையாட்டுப் பிரிவுத் தலைவராக விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் எம். அஹமட் சம்லி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# பாடசாலை மட்ட நிகழ்வுகளில் தலையீடுகள்! இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டன அறிக்கை



பாடசாலை மட்ட நிகழ்வுகளில் பொலிசாரினதும் அரச புலனாய்வாளரினதும் இராணுவத்தினரினதும் தலையீடுகள் மற்றும் விசாரணைச் செயற்பாடுகளை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் தீபன் திலீசன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த செய்தி குறிப்பில்,

பாடசாலைகளில் நடைபெற்றுவரும் இல்ல விளையாட்டு நிகழ்வுகளில் அலங்கரிக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக - குறிப்பாக, வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளில் பொலிசாரினதும் இராணுவத்தினரதும், அரச புலனாய்வாளர்களினதும் அச்சுறுத்தல் இடம்பெற்றுவருவது தனிமனித சிந்தனை மற்றும் மனச்சாட்சி சுதந்திரங்களை நசுக்கும் அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

இலங்கை அரசின் சட்ட வரையறைக்குட்பட்டு கருத்தியல் ரீதியாகவும் - கலை ரீதியாகவும் - குறியீட்டு வடிவங்கள் மூலமாகவும் - சமூகம் சார் பிரக்ஞைகளை வெளிப்படுத்தும் போது, அதனை அரச இயந்திரங்களால் நசுக்கும் செயற்பாடுகள் நடைபெறுவதற்கு அனுமதிக்க முடியாது.

இதற்கு கல்வித் திணைக்களங்களும் துணைபோகு மானால், கல்விக்குள் இராணுவ மற்றும் பொலிஸ் தலையீடுகளை ஆதரிக்கும் செயற்பாடுகளாகவே இவை அமையும்.

அண்மையில் நடைபெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வன்மை போட்டியின் இல்ல அலங்காரங்களில் மாணவர்கள் வெளிப்படுத்திய வெளிப்பாடுகள், இலங்கை அரசியலமைப்பில் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான சிந்தனை மற்றும் மனச்சாட்சி சுதந்திரத்துக்கு உட்பட்டதாகும்.

இந்த விடயங்களில் பொலிசாரோடு இணைந்து வடமாகாண கல்வி அமைச்சும் தலையீடு செய்வதென்பது மாணவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயற்பாடு எனபதே இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நிலைப்பாடாகும்.

இவ்விடயம் தொடர்பாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யவுள்ளோம். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொருத்தமான விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (O1)






# தொண்டராசிரியர் நியமனம் வழங்கக்கோரி போராட்டம்





(ஹஸ்பர் ஏ.எச்)

தொண்டர் ஆசிரியர் நியமனங்களை வழங்கக்கோரி திருகோணமலையில் இன்று (01) கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று இடம் பெற்றது.

கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

அபயபுர சந்தியில் இருந்து நடை பவனியாக பதாகைகளை ஏந்தியவாறு கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் வரை தொண்டர் ஆசிரியர்கள் சென்றனர்.

கடல் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தாவின் படங்களை பதாகைகளாக ஏந்தியும் மூத்த அமைச்சர் கௌரவ டக்ளஸ் ஐயா நிரந்தர நியமனத்தை பெற்றுத் தாருங்கள்! போன்ற வாசகங்களையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

இதன் போது கருத்துரைத்த கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் கு.சிவங்கர் - தற்போது 250 தொண்டர் ஆசிரியர்கள் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கையின் வடகிழக்கு உட்பட ஒட்டு மொத்தமாக தமிழ் பேசும் ஒரு சிரேஷ்ட கடல் தொழில் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா காணப்படுகிறார். இவர் எங்களுக்கான நியமனத்தை பெற்றுத்தர வேண்டும். கடந்த யுத்த காலங்களில் பல இன்னல்களுக்கு மத்தியில் தொண்டராசிரியர்களாக கடமையாற்றியுள்ளோம்.

தற்போது எமக்கு நீதி கோரி உண்ணாவிரதம், போராட்டம் என பல விடயங்களை செய்து வருகிறோம். எனவே, எங்களுக்கான நிரந்தர ஆசிரியர் நியமனத்தை பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுக்கிறோம், என்றார்.

இதன்போது குறித்த கவனயீர்ப்பில் கடல் தொழில் அமைச்சரின் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் மாவட்ட இணைப்பாளர் புஷ்பராசாவும் பிரசன்னமாகியிருந்ததுடன் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. அதனை ஏற்றுக் கொண்ட அவர் அமைச்சருக்கு அறிவித்து மகஜரை அனுப்பி நியமனத்தைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இக்கவனவீர்ப்பில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கொழுத்தும் வெயிலில் பங்கு கொண்டனர்.

# JRIDE

BEYOND THE ROAD

Safety and comfort are our concern

# ஜேரைட்
# JRIDE
## TAXI APP FROM JAFFNA
### இலங்கை முழுவதும் | Islandwide

DOWNLOAD PASSENGER APP

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store

**வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!**
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!

இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!

DOWNLOAD DRIVER APP

jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install

YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE

GET IT ON Google Play
Download on the App Store

## SCHEDULED BOOKING

New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

**விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?**

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

**HOTLINE : 706563213 / 703563213**

## JRIDE TAXI APP
## SPEED IT NET

பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

+94 703 563213
www.jride.lk

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.04.2024 இல் வெளியிடப்பெற்றது.